


FREE EDITION

January - 2012

# ஜோதி

ஆன்மிகச் செய்திச்சுடர்

Jothi

Spiritual Newsletter

ஜோதி 5: சுடர் 11 - 59

மூல மந்திரம்

ஓம் சக்தியே
பராசக்தியே
ஓம் சக்தியே
ஆதி பராசக்தியே
ஓம் சக்தியே
மருவூர் அரசியே
ஓம் சக்தியே
ஓம் விநாயகா
ஓம் சக்தியே
ஓம் காமாட்சியே
ஓம் சக்தியே
ஓம் பங்காருகாமாட்சியே
*

**மேல்மருவத்தூர்**
ஆதிபராசக்தி
சித்தர் பீடத்தில்
**“தைப்பூச ஜோதி” பெருவிழா**
**06.02.2012**

**மெல்போர்னில்**
சுயம்பு அருள்மிகு
ஆதிபராசக்தி
வார வழிபாட்டு
மன்றத்தில்



**“தைப்பூச ஜோதி” பெருவிழா**
**12.02.2012**
ஞாயிற்றுக்கிழமை

## "இருமுடி"

அன்னை ஆதிபராசக்தி, தன்னை நாடி வரும் பக்தர்கள் நலம் பெற வேண்டியும் துன்பம் தணிய வேண்டியும், ஊழ்வினைக் கொடுமைகள் தணிய வேண்டியும், ஆன்ம முன்னேற்றம் பெற வேண்டியும், பல வழிமுறைகளை அருள்வாக்கில் அருளியிருக்கிறாள். அவற்றுள் இருமுடி செலுத்தும் முறையும் ஒன்று. இன்று சித்தர் பீடத்தில் மட்டும்தான் பெண்கள் இருமுடி அணிந்து அன்னைக்கு அவர்கள் கைகளினாலேயே அபிடேகம் செய்யும் வசதி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தைப்பூச விழாவை ஒட்டியும் ஆடிப்பூர விழாவை ஒட்டியும் பக்தர்கள் சக்தி விரதம் இருந்து, சக்தி மாலை அணிந்து இருமுடி ஏந்திக்கொண்டு வந்து, செலுத்தித் தாங்கள் கையாலேயே அன்னையின் சுயம்புவிற்கு அபிடேகம் செய்வது நம் சித்தர் பீடத்தில் மரபு. 1990ஆம் ஆண்டிலிருந்து தைப்பூச விழாவில் மட்டும் இருமுடி செலுத்தும்படி அன்னை அருள்வாக்கில் கூறியுள்ளாள். அதன்படி வருடம் ஒருமுறை செலுத்துகிறோம்.

### இருமுடி அணிவது ஏன்?

அ) ஒரு கோணியில் தானியங்களைக் கொட்டி அந்தக் கோணியைச் சிறு கயிற்றால் இறுகக்கட்டுகிறார்கள். கோணியில் அதிகமாக உள்ள அந்த தானியத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய சக்தி ஒரு சிறிய கயிற்றுக்கு உள்ளது. உள்ளம் என்ற அழுக்குக் கோணியில் பாவங்கள் நிறைந்து, மூட்டையாக சுமையாக உள்ளது. இருமுடி கட்டி வந்து அவிழ்ப்பதனால் பாவங்கள் வெளியேற்றப்படுகின்றன. சுமை குறைகிறது. சிறு கயிறு, கோணியில் உள்ள பொருட்களைக் கட்டுப்படுத்துவதுபோல நம் இருமுடியை (பாவ மூட்டைகள்) அன்னை கட்டுப்படுத்துகிறாள்.

ஆ) இருமுடியில், ஒரு முடி உனது உள்ளத்து அழுக்குகளைப் போக்கிக்கொள்ள! இன்னொரு முடி உனது குடும்பத்தின் அழுக்குகளைப் போக்கிக்கொள்ள! ஒன்பது முறை சித்தர் பீடத்தில் இருமுடி செலுத்தியவர்களை ஏவல், பில்லி, சூன்யங்கள் தாக்காது. இருமுடி அணிய மாதவிலக்கு தடையல்ல என்று அன்னை கூறியுள்ளாள்.

(தொடர்ச்சி 02ஆம் பக்கம்)

**இதயம் கனிந்த**

**ஆங்கிலப் புதுவருட – தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!**

அன்னையின் அருள்வாக்கு:

**“இருமுடி அணிந்தால் உங்களுக்கெதிரான மாந்திரிகம் அழியும்”**

சுடரில்…..

நாடியும் தொண்டும்

பக்கம் - 3 - 5

UPCOMING EVENTS

Melbourne – Pg 7, 8
Sydney _ Pg 9

திருமதி அம்மா பதில்கள்

பக்கம் : 14

அருள்வாக்கும் அனுபவங்களும்..

பக்கம்: 6, 10

Divine Miracles
Pg: 11

ஆன்மிக நாட்குறிப்பு

பக்கம் : 12

"இருமுடி"

பக்கம்: 1 - 2

மேல்மருவத்தூர் ஆலய சிறப்பு விழாக்கள்

பக்கம் : 13

## இருமுடி….

### இருமுடி அணிபவர்கள் பின்பற்ற வேண்டிய நியமங்கள்:

இருமுடியுடன் உள்ளே வரும்போது மௌனம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இருமுடிக்கட்டை அவிழ்க்கும்போது உள்ளத்தைக் கட்டுப்படுத்த வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும். மௌனத்தை முடித்த பிறகுதான் இருமுடிக்கட்டில் உள்ள பொருட்கள் அவிழ்க்க வேண்டும்.

ஒன்பது தடவைகள் முடிந்திருந்தால் மஞ்சள் உடையில் வர வேண்டும். ஒன்பது மாலைகள் செலுத்தாதவர்கள் செவ்வாடையில் வருதல் வேண்டும்.

### இருமுடி செலுத்துவதால் உண்டாகும் பலன்கள்:

கலங்கிய நீரைத் தெளிவடைந்த பிறகு குடிப்பது போல் இருமுடி செலுத்தியும் துன்பம் தீராத நிலையில் இருப்பவர்கள் மனம் தெளிவடைந்து நிம்மதி பெறுகிறார்கள்.

இருமுடி தரித்த நாட்களில் விரதம் மேற்கொள்வதால் உள்ளக் கட்டுப்பாடு, மனக்கட்டுப்பாடு மற்றும் எண்ணக்கட்டுப்பாடு ஏற்படுவதால் மனதில் ஏற்படும் சஞ்சலம் நீங்குகிறது. இதனால் துன்பங்களை எதிர்கொள்வதற்கு இந்த விரதம் பயன்படுவதோடு மனவலிமையையும் கொடுக்கிறது.

### இருமுடி செலுத்துவதால் உண்டாகும் இதர பலன்கள்:

- உடல்நோய் உள்ளவர்கள் உடல்நலம் பெறுகிறார்கள்.
- ஊழ்வினை தணிகிறது. மனநிம்மதி பெறுகிறார்கள்.
- தடைப்பட்ட திருமணங்கள் தடையின்றிக் கைகூடுகின்றன.
- குழந்தைபேறு இல்லாதவர்கள் குழந்தைப்பேறு அடைகிறார்கள்.
- கல்வியில் முன்னேற்றம் அடைகிறார்கள்.
- ஒரு பணியில் இருப்பவர் பதவி முன்னேற்றம் அடைகிறார்கள்.
- வியாபாரம் நடத்தவும் நியாயமான இலாபம் கிடைக்கவும் வழி பிறக்கிறது.
- வேலையின்றி அலைபவர்கள் ஒரு வேலை கிடைத்து பிழைக்கிறார்கள்.
- விவசாயத்தில் வளம் கிடைக்க வழி கிடைக்கிறது.
- ஆன்மிக முன்னேற்றம் பெற அன்னை அருள் புரிகிறாள்.
- ஏவல், பில்லி, சூன்யத் தொல்லையிலிருந்து விடுபட வழி கிடைக்கிறது.

இருமுடி தவறாது அணிந்து வருவதால் பலன்களை அன்னையின் மூலம் அடைந்து வருவது என்பது சத்தியமே. இதை உணர்ந்து அன்னையின் பாதங்களை இறுகப்பற்றிக்கொண்டு வாழ்க்கையில் வளம் பெறுங்கள்.

(ஆன்மிக மடல்)

### கட்டுப்பாடும் தட்டுப்பாடும்

"கட்டுப்பாடு இல்லாத தன்மையே கட்டுப்பாட்டை இழக்க வைத்து விட்டது. கட்டுப்பாடு இல்லாத மனோ நிலையே தட்டுப்பாட்டை உண்டாக்கும். தெய்வம் இருக்கிறது என்று நினைத்துப்பார்க்க வேண்டும். ஒரு நிமிடம் நினைத்துப் பார்க்காவிட்டால்கூட அழிவு வரலாம்."

- அன்னையின் அருள்வாக்கு

# நாடியும் தொண்டும்

**சக்தி சரோஜினி முத்துக்கிருஷ்ணன்**
கோயம்பத்தூர்

## நாடி சோதிடம்

நாடி சோதிடம் என்பது தமிழகத்தில் நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஒருவரின் கைரேகையை வைத்து அவரது வாழ்வில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளைச் சொல்வது இதன் சிறப்பாகும். நெடுங்காலத்துக்கு முன்பாக முனிவர்களாலும், சித்தர்களாலும் ஏடுகளில் இந்த நாடி சோதிடத்து ஏடுகளில் எதிர் காலத்தில் நடைபெறவுள்ள நன்மைகளையும், தீமைகளையும் மங்கல நிகழ்ச்சிகளையும் அமங்கல நிகழ்ச்சிகளையும் வேறுபாடில்லாமல் குறிக்கப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள்.

## அன்னையின் தொண்டர்

அன்னையின் தொண்டர் ஒருவர் அம்மாவிடம் பக்தராக ஆவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு அவர் இளைஞனாக இருக்கும்போது, நாடி சோதிடம் பார்த்தார். அவர் நெல்லை மாவட்டம், உச்சிப்பொத்தை என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். நல்ல தொண்டர். அந்தப் பகுதியில் எந்த மன்றத்தில் வேள்வி நடைபெற்றாலும் அங்கே சென்று யாக குண்டம் கட்டிக் கொடுத்துவிடுவார். அம்மா பணி என்றால் ஓடியாடி இளைஞரைப்போல் செய்வார்.

## நாடி சொல்லியவை

இளவயதில் அவருடைய அண்ணன் காளிமுத்துவின் நாடி சோதிடத்தைப் பார்த்தார். நாடியில் சொல்லியவற்றை நோட்டுப் புத்தகத்தில் எழுதியும், பதிவு நாடாவில் பதிவு செய்தும் வைத்திருக்கிறார். அந்தப் பதிவு நாடாவை என்னிடம் போட்டுக் காட்டினார். அவருக்கு இத்தனாவது வயதில் திருமணம் நடக்கும். மைத்துனர் காக்காய் வலிப்பால் சாவார். மைத்துனன் மகளுக்கும் காக்காய் வலிப்பு வரும். அவருடைய குழந்தைகள் இத்தனை என்பனவும் அவருடைய 50 வயதில் அவர் மனைவிக்குத் தலை நோவு வந்து அந்த நோயால் மனைவி இறப்பார். 54 வயதில் காளிமுத்துவும் காலமாவர் என்பனவும், அவரது நாடியில் கூறப்பட்ட முக்கிய நிகழ்வுகளாகும்.

## நாடியில் சொல்லியவை நடந்தன

நாடி சோதிடத்தில் வந்ததைப்போலவே காளிமுத்துக்கு நாடியில் சொல்லிய வயதில் திருமணம் நடைபெற்றது. அதன்பின் அவரது மைத்துனர் காக்காய் வலிப்பால் காலமானார். மைத்துனர் மகளுக்கும் காக்காய் வலிப்பு நோய் வந்தது. நாடியில் சொல்லியதைப் போலவே அவருக்குக் குழந்தைகளும் பிறந்தன.

## மனைவிக்குத் தலை நோவு

ஒரு நாள் அவருடைய மனைவி தலைவலி என்றார். தலைவலி வந்தால் சாதாரணமாக மாத்திரை வாங்கிச் சாப்பிடுவார்கள். அதைப்போலவே அவரது மனைவியும் மாத்திரை சாப்பிட்டார். ஆனால், ஒரு நாள், இரு நாள் ஆகியும் தலைவலி தீரவில்லை. சில நாட்கள் தெரிந்த தைலங்கள் மருந்துகளால் தலைவலி நிற்காமல் நாளாக ஆக வலி கடுமை ஆகியது. அதனால் டாக்டர் ஊசி மருந்துகள் போட்டும், மாத்திரைகள் சாப்பிட்டும் தலை நோவு நிற்கவில்லை.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# நாடியும் தொண்டும்....

## பெரிய டாக்டர்கள்

பதினைந்து நாட்கள் ஆகியும் டாக்டர்கள் பார்த்தும் தலைவலி நிற்கவில்லை. தலைவலி மேலும் மேலும் அதிகமாகிவிட்டது. அதனால் பெரிய வைத்தியம் பார்க்க வேண்டும் என்று மனைவியின் தந்தையார் விரும்பினார். அதனால் காளிமுத்துவின் மாமனார் தன் மகளை உச்சிப்பொத்தைக் கிராமத்திலிருந்து பாளையங்கோட்டைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள கிருஸ்துவ மருத்துவமனையில் (தரமான பெரிய மருத்துவமனை) சேர்த்தார். அங்குப் பற்பல சோதனைகள், எக்ஸ்ரே படங்கள், 'ஸ்கேன்'கள் எடுத்து சிகிச்சை நடைபெற்றது. பெரிய டாக்டர்கள் வந்து பார்த்தும் நோய் குணமாகவில்லை. காளிமுத்துவின் மனைவிக்குத் தலைவலி மேலும் மேலும் தீவிரமாகி எதுவும் சாப்பிடமுடியவில்லை. அடிக்கடி வாந்தியும் மயக்கமும் வந்தன. உடல் நலிவுற்றுச் சோர்ந்து மிகவும் மெலிந்துவிட்டார்.

## நாடியும் காளிமுத்துவின் முடிவும்

சாதாரணத் தலைவியாக வந்தது மேலும் மேலும் தீவிரமடைந்து எந்த வைத்தியத்திற்கும் கட்டுப்படாமல் முற்றி வருவதைக் கண்ட காளிமுத்து இனி மனைவி பிழைக்கமாட்டாள் என்ற முடிவுக்கு வந்தார். அவருக்கு வயதும் ஐம்பதாகிறது. நாடியில் சொன்ன வாழ்க்கை நிகழ்ச்சிகள் இந்த வயதில் அவருடைய மனைவி தலைநோயால் மரணமடைய வேண்டும். தலை நோவும் வந்து விட்டது. என்ன வைத்தியம் பார்த்தும் குணமடையவில்லை. நாடியில் சொன்ன வாழ்க்கை நிகழ்ச்சிகள் எல்லாம் இதுவரை தவறாமல் நடைபெற்றுள்ளன. ஆகையால், நாடியில் சொன்னபடி மனைவியும் இறந்துவிடுவாள் எனக் காளிமுத்து முடிவு கட்டிவிட்டார்.

## தைப்பூச இருமுடி

அப்போது சித்தர் பீடத்தில் இருமுடி செலுத்துகின்ற காலம். மனைவி மரணப்படுக்கையில் இருக்கும்போதும் காளிமுத்து தான் வழக்கமாகச் செய்யும் அம்மா பணிகளை விடவில்லை. பல மன்றங்களுக்கும் சென்று மன்றத்தினர் சக்தி மாலை அணிந்து இருமுடி போடுவதில் உதவினார். இவர் மன்றம் மன்றமாகச் சென்று பணி செய்துகொண்டிருக்கும்போது மனைவியின் உடல்நலம் மிகவும் சரியில்லை. எந்த நேரத்திலும் எதுவும் ஆகலாம். எனவே, இவரை மனைவி படுத்திருக்கும் பாளையங்கோட்டை மருத்துவமனைக்கு வரும்படி செய்தி வந்தது.

## இருமுடியே முக்கியம்

இச்செய்தியைக்கேட்டு அவர் உடனே மனைவி இருக்கும் மருத்துவமனைக்குச் செல்லவில்லை. நாடியில் சொன்னபடி மனைவி சாகப்போவது உறுதி. இருமுடி செலுத்தவேண்டிய இந்த நேரத்தில் மனைவி இறந்துவிட்டால் நாம் இருமுடி செலுத்தமுடியாது. மனைவி இறந்தாலும் இருமுடி செலுத்த வேண்டியதை விட்டுவிடக்கூடாது. இந்த ஊரில் இருந்தால் மனைவி இறந்தவுடன் உறவினர்கள் வந்து எப்படியும் நம்மை அழைத்துச் சென்றுவிடுவார்கள் என்று நினைத்தார். அதனால் யாரும் அறியாத .இடமாகப்போய் இருக்க வேண்டும் நினைத்து, அவருடன் அன்று சக்திமாலை அணிந்த அவரது 9 வயது மகளையும் அழைத்துக்கொண்டு யாரிடமும் சொல்லிக்கொள்ளாது மாவட்டத்தில் வெகு தூரத்தில் உள்ள மன்றத்தில் போய்த்தங்கிவிட்டார்.

## பக்தியின் தன்மை

அவரும் அவரது மகளும் உற்றார் உறவினர் அறியாமல் ஒரு மன்றத்தில் தங்கி ஐந்து நாட்கள் விரதமிருந்து மருவத்தூருக்கு இருமுடி செலுத்தப் புறப்பட்டனர். இந்த ஐந்து நாட்களில் மனைவி இறந்திருந்தாலும் இதைத்தான் கேட்க நேர்ந்தால் மாலை செலுத்த மருவத்தூர் போக முடியாமல் உறவினர் தன்னை அழைத்துச் சென்றுவிடுவார்கள் என்பதனால் தலைமறைவாக மாலை போட்டு விரதமிருந்த இந்தத் தொண்டரின் பக்தியை என்னவென்று சொல்வது!

(தொடர்ச்சி…5ஆம் பக்கம்)

# நாடியும் தொண்டும்....

## பிரிந்தவர் சேர்ந்தனர்

இவர்கள் மருவத்தூர் செல்லவிருந்த பேருந்து மறுநாள் அதிகாலை சங்கரன்கோவிலிலிருந்து புறப்பட இருந்தது. அதில் பயணம் செய்து மருவத்தூர் செல்வதற்காக காளிமுத்துவும் அவரது மகளும் கடந்த சில நாட்களாக மறைவாக இருந்த ஊரிலிருந்து சங்கரன் கோவிலுக்கு வந்தார்கள். சங்கரன் கோவில் பேருந்து நிலையத்தில் பேருந்திலிருந்து ஒரு பக்கமாக இவர் இறங்கும்போது பேருந்தின் இன்னொரு வழியின் மூலமாக அவரது மனைவி ஏறுவதை காளிமுத்து பார்த்தார். உடனே மனைவின் பெயரைச் சொல்லி அழைத்துக்கொண்டே மறுபக்கம் ஓடினார். அவர் மனைவி பேருந்தைவிட்டு இறங்கினார். கணவரையும், மகளையும் கண்டதும் 'கோ'வென்று அழுதார். ஒரு மாதமாகக் கணவரைப் பிரிந்தவர் இன்று எதிர்பாராமல் கணவரைக் கண்டார்.

## தாய் தந்த உயிர்

நீ மிகவும் மோசமான நிலையில் மருத்துவமனையில் இருப்பதாகச் சொன்னார்களே! எப்படி சங்கரன்கோவில் வந்தாய் என்று கேட்டார். மன்றத்தில் நடைபெற்ற வேள்வியின் கலச தீர்த்தத்தை மன்றத்தினர் கொண்டு வந்து என் தலையிலும் நெற்றியிலும் தேய்த்தார்கள். உடனே தலைவலி நின்றது. இரண்டே நாளில் மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டேன். நீங்கள் மருவத்தூர் செல்ல இன்றுதான் சங்கரன்கோவில் வருவதாகச் சொன்னார்கள். உங்களைப் பார்க்கத்தான் சங்கரன்கோவில் வந்தேன். அந்தத்தாய்தான் எனக்கு உயிரைத் தந்தாள் என்று கண்ணீர் விட்டார்.

## சாவிலிருந்து காத்த கலச தீர்த்தம்

இங்கு நாம் சிலவற்றைக் கவனிக்க வேண்டும். பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து அரிய மருத்துவர்களிடம் காட்டியும் தீராத தலைவலி கலசதீர்த்தத்தை நெற்றியிலும் தலையிலும் தடவியதும் நின்றுவிட்டது. இதன் காரணம் என்ன என்று எண்ணிப் பார்க்கவேண்டும். வேள்விக் கலச தீர்த்தத்தின் பெருமை இதனால் விளங்குகிறது. இது மட்டுமல்ல வேள்விக் கலசத்தின் தீர்த்தம் பற்பலருக்கும் டாக்டர்களால் கைவிடப்பட்ட நோய்களையும் குணப்படுத்தியுள்ளது.

காளிமுத்துவின் வாழ்க்கையில் நாடி சோதிடத்தில் சொல்லியதைப் போலவே நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. ஆனால், ஐம்பதாவது வயதில் தலைநோவு வந்து அவர் மனைவி இறந்துவிடுவார் என்ற நிகழ்ச்சியை அவரே நம்பியும்கூட அது நடைபெறவில்லையே அதற்குக் காரணம் என்ன? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்? அவர் மனைவிக்குத் தலைநோவு வருவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பாகவே காளிமுத்து அன்னையின் பக்தியிலும் தீவிமாக இருந்தார். மனைவி இறந்ததைத் தெரிந்தால் இருமுடி செலுத்த மருவத்தூர் செல்லவிட மாட்டார்கள் என்பதற்காக இருமுடி அணிந்து மறைவாக மருவத்தூர் போக விழையும் அளவுக்கு அன்னையிடம் பக்தி கொண்டவர்.

ஐம்பத்து நான்கு வயதில் காளிமுத்து இறப்பார் என்று அவருடைய நாடி சொல்லியது. இன்று அவருக்கு அறுபத்தெட்டு வயதாகிறது. இன்றும் திடகாத்திரமாகத் தொண்டு செய்து வருகிறார். சிறந்த அவருடைய தொண்டுக்கும், பக்திக்கும் அன்னை அவருடைய விதியை மாற்றி அமைத்தது, அவருடைய தொண்டுக்காக அவர் மனைவி உயிரையும் காப்பாற்றிக் கொடுத்தது, அதன்மூலம் அவருக்குச் சொன்ன நாடி சோதிடத்ததை அன்னை பொய்யாக்கியது.

எனவே **நாடியையும் மாற்றக்கூடிய சக்தி அன்னை ஆதிபராசக்திக்கு உண்டு. விதியை மாற்ற வைக்கும் சக்தி தொண்டுக்கு உண்டு என்பதை உணரலாம்.**
ஓம் சக்தி அம்மாவே சரணம் அம்மா!

## அன்னையின் அருள்வாக்கு:

### ஆன்மிகத்தின் பலன்

**"மரம் வளர்ந்து காய்க்கும்போது தான் அதன் அருமை தெரிகிறது. அந்தப் பயனை மரம் அனுபவிப்பதில்லை. மற்றவர்கள்தான் அனுபவிக்கின்றனர். அதுபோல ஆன்மிகம் என்ற மரத்தை அடிகளார் பாடுபட்டு வளர்த்தாலும் பழம் என்ற பலனை அனுபவிக்கிறவர்கள் நீங்கள்தான் என்பதை மறந்துவிடக்கூடாது."**

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## நூற்றுக்கு நூற்றிருபது பாவம் செய்துவிட்டு.........

நாகராஜன்! கோவை நகரத்தில் ஓர் ஆலையில் பணிபுரிந்த தொழிலாளி. "கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை. கடவுளை நம்புகிறவன் முட்டாள்" என்று பேசிக்கொண்டு வாழ்ந்தவர்.

ஒருமுறை கடவுள் எதிர்ப்பு ஊர்வலத்தில் ராமன், கிருஷ்ணன் விக்கிரகங்களைச் செருப்பாலடித்தபடியே ஊர்வலம் போனார்களாம். அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட அவரும் அப்படியே செய்துகொண்டு போனாராம்.

தனக்கு மேற்பட்ட சக்தி ஒன்று உண்டு என்று அவனவனும் உணர்கிற சந்தர்ப்பம் வாழ்வில் ஒருமுறையாவது வருவதுண்டு. நல்வினை இருக்கிறவன் அத்தகைய சந்தர்ப்பங்களில் விழித்துக்கொள்கிறான். தெய்வ சிந்தனை பெறுகிறான். மனமாற்றமடைகிறான். அந்த நல்வினை இல்லாதவன் விழிப்படையாமல் போகிறான்.

நாகராஜன் விழித்துக்கொள்கிற நேரம் ஒன்று வந்தது.

அவர் வேலை செய்துகொண்டு வந்த ஆலையில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையே சுமூகமான உடன்பாடு ஏற்படாததால் ஆலை இழுத்து மூடப்பட்டது. நிர்வாகத்தில் உள்ளவனுக்குச் சோற்றுக்குக் கவலையில்லை. ஆனால், தொழிலாளிகள் என்ன செய்ய முடியும்? மாதங்களாயின. வருடங்கள் கடந்தன.

வீட்டிலிருந்த நகைகளை விற்றுச் சமாளித்தார் நாகராஜன். கொஞ்சநாள் கடன்வாங்கிச் சமாளித்தார். நாளாக நாளாக உதவி செய்து கொண்டிருந்த நண்பர்களும் விலக ஆரம்பித்தனர். உறவுக்காரர்களும் விலக ஆரம்பித்தனர். விலைவாசி விஷம்போல ஏறிவரும் இன்றைய நிலையில் அவனவனும் குடும்பத்தை நடத்துவதற்கே திக்குமுக்காடுகிற நிலையில் எந்த நண்பர் அவருக்குக் கடைசி வரை உதவி செய்துகொண்டே இருக்க முடியும்?

எந்தக் கட்சியை உயிராக மதித்தாரோ அந்தக் கட்சிக்காரனும் அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அடிமட்டத்துத் தொண்டர்களுக்கெல்லாம் கட்சித் தலைமை படியளக்க முடியுமா?

எல்லோரும் கைவிட்ட நிலையில் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடினார் நாகராஜன். 'தாளம் படுமோ தறிபடுமோ?' என்ற நிலையில் படாத அவதிப்பட்டார்.

கோவை நகரிலே உள்ள அவரது நண்பர்கள் சிலர், "ஒருமுறை இருமுடி போட்டுக்கொண்டு மருவத்தூருக்கு வா ஐயா! உன் கட்சிக்காரனும் கைவிட்டுவிட்டான். வேலை நிறுத்தத்தை தூண்டிவிட்ட தொழிற்சங்கத் தலைவர்களும் முதலாளியிடம் இரகசியப் பேரம் செய்துகொண்டு பெற வேண்டியதைப் பெற்றுக்கொண்டு நழுவிவிட்டார்கள். இனி உனக்கு யார் உதவி? எங்களோடு இருமுடி போட்டுக்கொண்டு வா!" என்று அழைத்தார்கள். அவ்வாறே வந்தார்.

அன்னையிடம் அருள்வாக்கு கேட்கும் பேறு கிடைத்தது. "வா மகனே! அவனவனும் நூற்றுக்கு நூறு பாவம் செய்துவிட்டு என்னிடம் வருகிறான். நீயோ நூற்றுக்கு நூற்றியிருபது பாவம் செய்துவிட்டு வந்திருக்கிறாயே மகனே? என் மண்ணை மிதித்துவிட்டாய். உன்னைக் காப்பாற்றுகிறேன். அடிக்கடி என் வாரவழிபாட்டு மன்றத்தில் சென்று தொண்டு செய்! வயிற்றுக்குக் கவலையில்லாமல் வழி செய்கிறேன். படிப்படியாக முன்னேற்றம் தருகிறேன்" என்றாள் அன்னை.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events – January 2012

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram

மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)

விக்டோரியா – அவுஸ்திரேலியா

மன்ற தொலைபேசி: 0434648416
(மன்றம் வழிபாட்டிற்காகத் திறந்திருக்கும் காலம் மட்டும்)

**January - மார்கழி - தை**

Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0411881024, 0433440194, 0417113082

| | | | | |
|---|---|---|---|---|
| 01.01.2012 | Sunday | மார்கழி | 16 | **Joint Prayer – 6.00p.m. – 8.30p.m.**<br>**"1008 போற்றித்திருவுரு"**<br>**மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு** |
| 02.01.2012 | Monday | மார்கழி | 17 | 7.00p.m. – 8.00p.m. |
| 03.01.2012 | Tuesday | மார்கழி | 18 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** - 7.30p.m. – 9.00p.m. |
| 04.01.2012 | Wednesday | மார்கழி | 19 | 7.00p.m. – 8.00p.m. |
| 05.01.2012 | Thursday | மார்கழி | 20 | 7.00p.m. – 8.00p.m. |
| 06.01.2012 | Friday | மார்கழி | 21 | 7.00p.m. – 8.00p.m. |
| 07.01.2012 | Saturday | மார்கழி | 22 | 7.00p.m. – 8.00p.m. |
| 08.01.2012 | Sunday | மார்கழி | 23 | Joint Prayer– *பௌர்ணமி* –<br>**"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>6.00p.m. – 8.30p.m. |
| 09.01.2012 | Monday | மார்கழி | 24 | 7.00p.m. – 8.00p.m. |
| 10.01.2012 | Tuesday | மார்கழி | 25 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** - 7.30p.m. – 9.00p.m. |
| 11.01.2012 | Wednesday | மார்கழி | 26 | 7.00p.m. – 8.00p.m. |
| 12.01.2012 | Thursday | மார்கழி | 27 | 7.00p.m. – 8.00p.m. |
| 13.01.2012 | Friday | மார்கழி | 28 | 7.00p.m. – 8.00p.m. |
| 14.01.2012 | Saturday | மார்கழி | 29 | 7.00p.m. – 8.00p.m. |
| 15.01.2012 | Sunday | தை | 01 | **Joint Prayer – 6.00p.m. – 8.30p.m. -** தைப்பொங்கல் தினம்<br>**"1008 போற்றித்திருவுரு"**<br>**மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு** |
| 16.01.2012 | Monday | தை | 02 | 7.00p.m. – 8.00p.m. |
| 17.01.2012 | Tuesday | தை | 03 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** - 7.30p.m. – 9.00p.m. |
| 18.01.2012 | Wednesday | தை | 04 | 7.00p.m. – 8.00p.m. |
| 19.01.2012 | Thursday | தை | 05 | 7.00p.m. – 8.00p.m. |
| 20.01.2012 | Friday | தை | 06 | 7.00p.m. – 8.00p.m. |
| 21.01.2012 | Saturday | தை | 07 | 7.00p.m. – 8.00p.m. |
| 22.01.2012 | Sunday | தை | 08 | Joint Prayer - தை அமாவாசை<br>"1008 போற்றித்திருவுரு"மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு<br>6.00p.m. – 8.30p.m. |
| 23.01.2012 | Monday | தை | 09 | 7.00p.m. – 8.00p.m. |
| 24.01.2012 | Tuesday | தை | 10 | **Joint Prayer – கூட்டு வழிபாடு**<br>- 7.30p.m. – 9.00p.m. |
| 25.01.2012 | Wednesday | தை | 11 | 7.00p.m. – 8.00p.m. |
| 26.01.2012 | Thursday | தை | 12 | 7.00p.m. – 8.00p.m. |
| 27.01.2012 | Friday | தை | 13 | 7.00p.m. – 8.00p.m. |
| 28.01.2012 | Saturday | தை | 14 | 7.00p.m. – 8.00p.m. |
| 29.01.2012 | Sunday | தை | 15 | **Joint Prayer – 6.00p.m. – 8.30p.m.**<br>**"1008 போற்றித்திருவுரு"**<br>**மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு** |
| 30.01.2012 | Monday | தை | 16 | 7.00p.m. – 8.00p.m. |
| 31.01.2012 | Tuesday | தை | 17 | **Joint Prayer – கூட்டு வழிபாடு**<br>- 7.30p.m. – 9.00p.m. |

# Melbourne - Mandrams – Upcoming Events – January 2012

## Vermont South

### Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram

Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133
(Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 06.01.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 08.01.2012 | SUNDAY – ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 13.01.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.01.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.01.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Lalor

Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 01.01.2012 | SUNDAY - ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 15.01.2012 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.01.2012 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Mulgrave

### Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref.: 80 F 5)

Joint Prayers: Every Sunday

| | | | |
|---|---|---|---|
| 01.01.2012 | SUNDAY – ஞாயிறு | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 08.01.2012 | SUNDAY – ஞாயிறு | 09.00a.m. – 06.10p.m. - | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing “Thiru Vilakku Pooja” – “திருவிளக்குப் பூஜை” |
| 15.01.2012 | SUNDAY – ஞாயிறு | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 22.01.2012 | SUNDAY – ஞாயிறு | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 29.01.2012 | SUNDAY – ஞாயிறு | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |

# எப்படி வளர வேண்டும்?

“நமக்காக வாழாமல் பிறருக்காக வாழ வேண்டும்.
இந்த உலகமே என்னுடையது என்ற பரந்த மனப்பான்மையோடு வளர வேண்டும்”

\- அன்னையின் அருள்வாக்கு

# Sydney - Mandrams - Upcoming Events – January 2012

| Homebush | Westmead | Lidcombe |
|---|---|---|
| Melmaruvathur<br>Athiparasakthi<br>Sithar Peeta<br>Sydney Centre<br><br>Contact: 02-97643872<br>0416217317<br><br>**Every Friday**<br>**7.30p.m. – 9.00p.m.**<br><br>Homebush High School<br>(Gymnastic Hall)<br>Bridge Road, Homebush 2140<br><br>**Joint Prayers:**<br>**06.01.2012**<br><br>**08.01.2012**<br>**Pournami Vilakku Pooja**<br>**7.30p.m. – 9.30p.m.**<br><br>**13.01.2012**<br>**20.01.2012**<br>**27.01.2012** | Melmaruvathur Swayambu<br>Arulmihu Annai<br>Athiparasakthi Sitherpeedam<br>NSW (Australia)<br>Contact: 02-96420519<br>0425319622<br><br>**Every Friday**<br>**7.30p.m. – 9.30p.m.**<br><br>Westmead Public Primary School<br>Moree Street - Westmead<br><br>**Joint Prayers:**<br>**06.01.2012**<br><br>**08.01.2012**<br>**Pournami Vilakku Pooja**<br>**7.30p.m. – 9.30p.m.**<br><br>**13.01.2012**<br>**20.01.2012**<br>**27.01.2012** | Athiparasakthi<br>Spiritual & Charitable<br>Movment of<br>Australasia<br>Contact: 02-97022446<br><br>**Every First**<br>**Friday of the month**<br><br>**7.30p.m. – 9.30p.m.**<br><br>23, Cambridge Street,<br>Lidcombe 2141<br>NSW<br><br>**Joint Prayers:**<br><br>**08.01.2012**<br>**Pournami**<br>**Vilakku Pooja**<br>**7.30p.m. – 9.30p.m.** |


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

ஆண்டுச்சந்தா ரூபா ₹ 120.00 (இந்தியா)
ஆயள் சந்தா ரூபா ₹ 1600.00 (இந்தியா)

**வெளிநாட்டுச் சந்தா இந்திய ரூபா ₹ 1500.00 (இரண்டு ஆண்டுகள்)**

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.
உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli'Office, Adhiparasakthi Sithar Peetam,
Melmaruvathur 603319,Tamil Nadu, South India.

## அருள்வாக்கும் அனுபவங்களும்……

அன்னையின் கட்டளைப்படியே கோவையில் உள்ள ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம் ஒன்றுடன் தன்னை இணைத்துக்கொண்டு தொண்டு செய்து வந்தார்.
அதன்பிறகு அவர் வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. கால்பட்டினி, அரைப்பட்டினி, முழுப்பட்டினி என்றிருந்த நிலை மாறியது. தெய்வம் மனித உருவில் வந்துதான் உதவி செய்யும் என்பர் முன்னோர். அன்னை யார் மூலமாகவோ அந்தக் குடும்பத்தில் உலை கொதிக்க அருள் பாலித்தாள்.

இன்றைக்கு உலையில் போட அரிசி இல்லையே… என்ன செய்வது? என்று கணவனும் மனைவியும் தலையில் கை வைத்துக்கொண்டு தவிப்பார்களாம். நண்பர்களோ, உறவினர்களோ, தெரிந்தவர்களோ யார் மூலமாவது அன்றைக்குப் பண உதவி கிடைக்குமாம்.

கடைசியாக ஆட்டோ ரிக்ஷோ வாங்கி ஓட்டுகிற நிலைக்கு அவர் பிழைப்புக்கு வழி காட்டினாள் அன்னை.

இப்படித் தெய்வத் தொண்டு செய்ய வைத்து, அந்த அன்பரின் வயிற்றுப்பிரச்சினையைத் தீர்த்தாள் அன்னை.
“ஏ! புலவர்களே! கொடுக்கிலாதானைப் பாரியே என்று புகழ்ந்தாலும் கொடுப்பவன் இல்லை. மிடுக்கிலாதானை வீமனே! வில் விசயனே! என்று பாடினாலும் கொடுப்பாரில்லை.

யார் யாரையோ புகழ்ந்து பாடி இளைத்துப்போன புலவர்களே! இறைவனைப் பாடுங்கள். அவன் புகழைப் பாடுங்கள். அப்படிப் பாடினால் உங்களுக்கு ஒருவேளைச் சோறாவது கிடைக்க அருள்பாலிப்பான். ஒரு முழம் துணியாவது கிடைக்க அருள்பாலிப்பான். அடுத்த பிறப்பில் அவன் உலகத்திலாவது உங்களுக்கு இடம் கிடைக்கும். இதிலே சந்தேகம் இல்லை” என்று 1200 ஆண்டுகளுக்கு முன்பு சுந்தரர் பாடினார்.

“ஓம் சக்தி! ஓம் சக்தி! என்று திரிந்தால் சோறு வந்துவிடுமா? என்று ஈரப்பசை உள்ளவனும் புளியேப்பம் கொண்டனும் கேலி செய்கிறான்.

என்றோ சுந்தரர் பாடிய பாடலின் கருத்தினை இன்றைக்கு உண்மையாக்கிக் காட்டினாள் அன்னை. தெய்வ உருவங்களைச் செருப்பாலடித்துவிட்டு “அம்மா! தாயே!” என்று வந்தவனுக்கும் வயிற்றுக்குச் சோறு கிடைக்க அருள்பாலித்தாள் அன்னை.
தன் பக்தனோ – தன் தொண்டனோ வயிற்றுக்குச் சோறு கிடைக்காமல் தவிப்பதை அன்னை இந்த அவதார காலத்தில் பொறுத்துக்கொள்வதில்லை. எப்படியேனும் வயிற்றுக்கு வழி செய்துவிட்டுத்தான் அவனை வேறு வகையில் சோதிப்பாள். தண்டிப்பாள்.

நாகராஜன் போலவே வேறு சில அன்பர்களின் வயிற்றுப் பிரச்சினையை அன்னை தீர்த்து வைத்த நிகழ்ச்சிகள் பல உண்டு.

இன்றைக்கு வறுமையிலும் ஏழ்மையிலும் தவிக்கிற மக்கள் தங்கள் வீடுகளில் தினமும் 108, 1008 மந்திரங்களைப் படித்து அன்னையை வழிபட்டு வந்தால் அதனால் அந்தக் குடும்பத்திற்கு ஏதாவது பலன் கிடைக்கும். ஊழ்வினை குறையும். மன நிம்மதி கிடைக்கும். அவர்களின் பிள்ளைக்குட்டிக்காவது பலன் கிடைக்கும். அந்தக்குடிசை வீடுகளில் மங்கலம் நிறையும். தரித்திரம் தொலையும். படிப்படியான முன்னேற்றம் கிடைக்கும்.

ஆனாலும் என்ன? இன்றைக்கு ஏழ்மையை வைத்து அரசியல் பண்ணுகிறவர்களை உலகம் நம்புகிறது. சினிமா நடிகர்களைத் தெய்வங்களாக மதித்துப் போற்றுகிறது. ஆன்மிகத்தை நம்புகிறவர்கள் குறைவு.
தன்னை நாடிவரும் எல்லோருக்கும் அருள்பாலிக்கத்தான் அன்னையின் திருவுள்ளம் விரும்புகிறது. ஆனாலும் அவனவனிடமிருந்து அதற்கான முயற்சி வரவேண்டுமே…தெய்வம் என்னுமோர் சிந்தயை வராதவர்கள் எங்கே முயற்சி செய்யப் போகிறார்கள்? இத்தகையவர்களின் பரிதாப நிலையை எண்ணி வருந்தத்தான் முடிகிறது. வேறு என்ன செய்வது?

***

# Divine Miracles at Melmaruvathur

## Take out the vehicle after half an hour:

Those days even when Melmaruvathur had not become famous, the crowds were not there. A few lorry drivers used to park their vehicles in front of the temple, go round the temple, light camphor, donate some money and proceed. Mother used to give oracles on Thursdays till around 1p.m. One such day:

Mother sent for a driver who had parked his lorry and was standing there. The driver wondered why he had been called by Mother. Mother addressed him and said "Son, do not take out your vehicle now! Take it out after half-an-hour" The driver stopped vehicle for half-an-hour and started his vehicle. On his way he saw that another lorry had met with an accident and many lay dead. It was fatal that an accident happened there. If the driver had gone half-an-hour earlier perhaps he would have been a victim. Mother out of her divine compassion warned and protected the man who had prayed to Her.

## You are going to be in trouble:

Shri Venkataraman who was a member of Perundurai Adiparashakthi Weekly Worship Centre was devoted to Mother and had faith in Her. He went for divine revelation on his birthday and performed Abhishekam after worshipping Mother. Mother said "Son, you are going to be in trouble. I shall save you, go with a cheerful heart". A month later he suffered a heart attack and was admitted in a critical condition at the ICU of a Hospital in Erode. He was given oxygen and medication. Many Cardiac specialists came to the Hospital late at night. They examined him and said that they will have to wait and watch for 24Hrs. In the meanwhile, a temple service was done for him and he was given the offerings and holy water was sprinkled on him. Immediately his blood pressure which was not getting under control became stable. The doctors who had treated him were surprised by the sudden change. He became alright and he participated regularly in the Weekly Worship Centre and did service at the Spiritual Conference at Gobi.

## You will be born as a woman and suffer for you past deed:

A Brahmin from Maduri had married another woman even while his first wife was alive. In order to prevent clashes between his heirs over property division, he also underwent vasectomy. He did not tell his second wife about this. Doesn't every woman yearn for a child? When that devotee went for spiritual revelation Mother said, "Son, you have commuted a great mistake. You will become one with me only after you are born as a woman in your next birth and undergo retribution. She had also perhaps said that he would be reborn either in Srilanka or Andaman. The devotee had prayed, "Mother! Even if I am born as a woman, help me not forget you and save me from sins". Mother assured him that She would be there to save him even in his next birth.

*****

# ஆன்மிக நாட்குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 05.01.2012 | வியாழன் | மார்கழி | 20 | ஸ்ரீ வைகுந்த ஏகாதசி |
| 08.01.2012 | ஞாயிறு | மார்கழி | 23 | ஆருத்திரா தரிசனம்<br>**பௌர்ணமி தினம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி<br>வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம்<br>**திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 14.01.2012 | சனி | மார்கழி | 29 | போகிப் பண்டிகை |
| 15.01.2012 | ஞாயிறு | தை | 01 | தைப்பொங்கல் |
| 16.01.2012 | திங்கள் | தை | 02 | மாட்டுப்பொங்கல் - திருவள்ளுவர் தினம் |
| 17.01.2012 | செவ்வாய் | தை | 03 | உழவர் திருநாள் |
| 22.01.2012 | ஞாயிறு | தை | 08 | **தை அமாவாசை**<br>**அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி<br>வார வழிபாட்டு மன்றம் |
| 01.02.2012 | புதன் | தை | 18 | தை கார்த்திகை |
| 06.02.2012 | திங்கள் | தை | 23 | **தைப்பூசம்**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் தைப்பூச ஜோதி ஏற்றல் |
| 07.02.2012 | செவ்வாய் | தை | 24 | **பௌர்ணமி தினம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி<br>வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 12.02.2012 | ஞாயிறு | தை | 29 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 20.02.2012 | திங்கள் | மாசி | 08 | மஹா சிவாராத்திரி |
| 21.02.2012 | செவ்வாய் | மாசி | 09 | **அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி<br>வார வழிபாட்டு மன்றம் |
| 03.03.2012 | சனி | மாசி | 20 | ஆன்மிக குரு அருள்திரு அம்மா அவர்களின் 72ஆவது அவதாரத்திருநாள் |
| 07.03.2012 | புதன் | மாசி | 24 | மாசிமகம் |
| 08.03.2012 | வியாழன் | மாசி | 25 | **பௌர்ணமி தினம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி<br>வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 11.03.2012 | ஞாயிறு | மாசி | 28 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 22.03.2012 | வியாழன் | பங்குனி | 9 | **அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி<br>வார வழிபாட்டு மன்றம் |
| 23.03.2012 | வெள்ளி | பங்குனி | 10 | யுகாதி தெலுங்கு வருடப்பிறப்பு |
| 31.03.2012 | சனி | பங்குனி | 18 | ஸ்ரீ இராமநவமி |
| 05.04.2012 | வியாழன் | பங்குனி | 23 | பங்குனி உத்திரம் |
| 06.04.2012 | வெள்ளி | பங்குனி | 24 | **பௌர்ணமி தினம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி<br>வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 13.04.2012 | வெள்ளி | சித்திரை | 01 | "நந்தன" தமிழ் வருடப்பிறப்பு |

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

# ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!

ஆதிபராசக்தி சித்தர் பீடம்

மேல்மருவத்தூர்



## 2012
## ஸ்ரீ கர - ஸ்ரீ நந்தன வருடம்

## ஆலய சிறப்பு விழாக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி | 16 | 01.01.2012 | ஞாயிறு | ஆங்கிலப் புத்தாண்டு |
| மார்கழி | 23 | 08.01.2012 | ஞாயிறு | பௌர்ணமி |
| தை | 1 | 15.01.2012 | ஞாயிறு | தைப்பொங்கல் |
| தை | 8 | 22.01.2012 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| தை | 23 | 06.02.2012 | திங்கள் | தைப்பூசம் |
| மாசி | 9 | 21.02.2012 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| மாசி | 20 | 03.03.2012 | சனி |  ஆன்மிக குரு அருள்திரு அம்மா அவர்களின் 72ஆவது அவதாரத் திருநாள் |
| மாசி | 25 | 08.03.2012 | வியாழன் | பௌர்ணமி |
| பங்குனி | 9 | 22.03.2012 | வியாழன் | அமாவாசை - வேள்வி |
| பங்குனி | 24 | 06.04.2012 | வெள்ளி | பௌர்ணமி |
| சித்திரை | 8 | 20.04.2012 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| சித்திரை | 23 | 05.05.2012 | சனி | சித்திரை பௌர்ணமி |
| வைகாசி | 7 | 20.05.2012 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| வைகாசி | 22 | 04.06.2012 | திங்கள் | பௌர்ணமி |
| ஆனி | 05 | 19.06.2012 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| ஆனி | 19 | 03.07.2012 | செவ்வாய் | பௌர்ணமி |
| ஆடி | 03 | 18.07.2012 | புதன் | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 07 | 22.07.2012 | ஞாயிறு | 41ஆவது ஆடிப்பூரம் |
| ஆடி | 08 | 23.07.2012 | திங்கள் | 41ஆவது ஆடிப்பூரம் |
| ஆடி | 17 | 01.08.2012 | புதன் | பௌர்ணமி |
| ஆவணி | 01 | 17.08.2012 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| ஆவணி | 15 | 31.08.2012 | வெள்ளி | பௌர்ணமி |
| ஆவணி | 30 | 15.09.2012 | சனி | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 13 | 29.09.2012 | சனி | பௌர்ணமி |
| புரட்டாசி | 29 | 15.10.2012 | திங்கள் | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 30 | 16.10.2012 | செவ்வாய் | நவராத்திரி ஆரம்பம் |
| ஐப்பசி | 13 | 29.10.2012 | திங்கள் | பௌர்ணமி |
| ஐப்பசி | 28 | 13.11.2012 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 13 | 28.11.2012 | புதன் | பௌர்ணமி – கார்த்திகை தீபம் |
| கார்த்திகை | 27 | 12.12.2012 | புதன் | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 28 | 13.12.2012 | வியாழன் | அமாவாசை |
| மார்கழி | 11 | 25.12.2012 | செவ்வாய் | கிறிஸ்மஸ் |
| மார்கழி | 14 | 28.12.2012 | வெள்ளி | பௌர்ணமி |



# திருமதி அம்மா பதில்கள்

திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

**அருள்வாக்கில் அம்மா என்னிடத்தில் "எதைச் செய்தாலும் அம்மாவைக் கேட்டுச்செய்" என்று கூறி உள்ளார்கள். ஒவ்வொரு செயலுக்கும் அம்மாவை எப்படிக் கேட்பது என்று புரியவில்லை. கொஞ்சம் தெளிவுபடுத்துங்கள் அம்மா!.**

அம்மா அருள்வாக்கில் "கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும், உன்னை நீயே காப்பாற்றிக்கொள்ள வேண்டும்" என்றும் கூறி இருக்கிறார்கள். வாழ்க்கையில் அன்றாடத் தேவைகளை, செயல்களை நம் ஆறாவது அறிவைப் பயன்படுத்தி, ஒன்றுக்குப் பலமுறை யோசித்து, பின் விளைவுகளைச் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும். சின்னச் செயல்களுக்கு எல்லாம் அம்மாவிடம் போகக்கூடாது. வாழ்க்கையில் முக்கியமான முடிவை எடுக்கத் தடுமாறுகின்ற நேரத்தில் குருவின் உதவியை, அல்லது அம்மாவின் அருள்வாக்கை நாடலாம். சிலபேர் தொழில் முதலீடு செய்து ஏமாந்து, திருமணம் செய்து ஏமாந்து அம்மாவிடம் வருகிறார்கள். "அம்மா! தெரியாம தப்பு செய்துட்டோம். அம்மாதான் காப்பாத்தணும், அம்மாதான் மன்னிக்கணும்" என்று அம்மாவிடம் வருகிறார்கள். சிலர் உப்புச்சப்பு இல்லாத காரியங்களுக்கெல்லாம் அம்மாவிடம் வந்து தொந்தரவு செய்கிறார்கள். உங்களுக்கு எந்தச் சூழ்நிலையில் அம்மா அப்படிக் கூறினாளோ! எனக்குத் தெரியவில்லை. "எதைச் செய்தாலும்" என்றால் எந்த முக்கிய முடிவு எடுப்பதாக இருந்தாலும் என்னைக் கேட்டுச் செய்ய வேண்டும் என்று அம்மா கூறியிருக்கலாம்..

**நமது சித்தர் பீடத்தில் கருவறையில் விதவைகள் வெள்ளை உடையுடன் 108 அர்ச்சனை செய்யலாமா? அதே போன்று மன்றங்களிலும் செய்யலாமா?**

விதவைகள் என்று தனியாகத் தெரியும்படி ஏன் வெள்ளைப் புடவை அணிந்து கொள்ளவேண்டும்? மனைவியை இழந்த கணவன் என்று தெரியும்படி ஆண்கள் ஏதாவது கலரில் சீருடை அணிந்துகொள்கிறார்களா? இதுபோல பழைய உலக வழக்குக்குக் கட்டுப்பட்டுத்தான் பெண்கள் சமுதாயமே சீரழிந்து கொண்டிருக்கிறது. மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு பெண்கள் கணவனை இழந்தபோதும் ஒழுக்கத்தோடு இயல்பாக வாழ்ந்தால் போதுமானது. இப்பொழுது பெண்கள் எவ்வளவோ மாறிக்கொண்டிருக்கிறார்கள். தூய்மையான வெள்ளைச் சேலை அணிவதில்லை. நம் சித்தர் பீடத்திற்கு விதவைகளும் சிவப்புச்சேலை அணிந்து வருகிறார்கள். வெள்ளைச்சேலை அணியும் பெண்களும் அர்ச்சனை செய்யலாம். அம்மா ஏற்றுக் கொள்வார்கள். நீங்கள் ஆண் என்பதால் பெண்களைப் பற்றி இப்படி ஆராய்ச்சி செய்யக்கூடாது?.



ஓம் சக்தி!

## Melmaruvathur Aadhiparasakthi Brisbane Mandram
## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பிரிஸ்பேர்ண் மன்றம்

P.O.Box: 750, SumnerPark, BC, Qld 4074



"Service and Devotion are the Eyes of Spirituality"
"Spirituality is knowing, understanding and realizing Thyself" – **Melmaruvathur Amma's Oracle.**

**Bajan:**
**5.00p.m to 7.00p.m.**

# 22.01.2012
**Sunday**
ஞாயிற்றுக்கிழமை – தை 08

**கூட்டுப்பிரார்த்தனை:**
மாலை 5.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை

**1 Lalina Street,**
**Middle Park – Qld 4074**

Contacts:

Sakthi Para
Mob: 0438 778 483

Sakthi Kalyanasundaram
Mob: 0411 165 067

Sakthi Thilaga Vijeyakumar
07-38234628

நன்மைகள் விளைய நன்மைகள் செய்வோம் – நமக்கென உளதை பிறர்க்கும் கொடுப்போம்

